# சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

# எஸ்சி எண் 332/2022

| | |
|---|---|
| பெயர் | .. சந்துரு(அசா1) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024 ஆண்டு ஜீன் மாதம் 26ம்நாள் இந்நீதிமன்ற உதவியாளர் மேரி ஜீலியட் அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
26.06.2024
1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

எனது பெயர் சந்துரு. நான் ஆலம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் Travels தொழில் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அந்த காயம் யாரால் ஏற்பட்டது என்றால் அந்த சமயத்தில் நிறைய நபர்கள் இருந்ததால் யாரால் ஏற்பட்டது என்று கூறமுடியாது. போலீஸார் என்னை விசாரித்தார்கள். நான் கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது புகார் மனு ஆகும். அது **அசாஆ.1.** வழக்குச் சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளுக்கும் எனது காயத்திற்கும் தொடர்பு உள்ளதா என்றால் இல்லை.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

ஆஜர் எதிரிகள் சம்பவத்தின்போது என்னை தாக்கினார்களா என்றால் இல்லை. போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் ஆனால் அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதாக நான் கூறுவது பொய் என்றாலும், போலிஸார் என்னை விசாரித்ததாக நான் கூறுவது பொய் என்றாலும், மேற்கு காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்ததாக கூறுவது

பொய் என்றாலும், சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

(ஒம்) D.மாரிக்காளை.,B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.